எரேமியாஸ் ஆகமம் 29:13

நீங்கள் நம்மைத் தேடுவீர்கள்; முழு இருதயத்தோடு தேடிய பின்னர், நம்மை அடைவீர்கள்.

நாளாகமம் 1 16:11

ஆண்டவரையும், அவருடைய வல்லமையையும் தேடுங்கள்; அவரு டைய சந்நிதானத்தை நித்தமும் தேடுங்கள்.

நாளாகமம் 2 15:2

அவன் வெளிப்பட்டு ஆசா வுக்கு எதிர்கொண்டுபோய் அவனை நோக்கி: ஆசாவே, யூதாவின் புத்தி ரரே, பெஞ்சமீன் கோத்திரத்தாரே, கேளுங்கள்: கர்த்தர் உங்களுக்குத் துணையாக வந்தார். நீங்கள் அவரைத் தேடினால் அவர் உங்களுக்கு அகப் படுவார். நீங்கள் அவரை விட்டுவிட் டாலோ அவரும் உங்களை விட்டு விடுவார்.

சங்கீதங்கள் 63:1

சர்வேசுரா! நான் உம்மை வேண்டிக் கொள்ளும்போது என் மன்றாட்டைக் கேட்டருளும்; என் சத்துருவினுடைய பயத்திலிருந்து என்னை விடுவித்தருளும்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 7:7

கேளுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். (மத். 21:22; மாற். 11:24; லூக். 11:9-13.)

சங்கீதங்கள் 37:4

உமது கோபத்தின் முகத்தே எனது திரேகத்தில் சுகமற்றுப் போயிற்று, என் பாவங்களின் முகத்தே என் எலும்புகள் உறவற்றுக் கலகலத் துப்போயின.

சங்கீதங்கள் 105:4

ஆண்டவரே! நீர் உமது பிரசைகளுக்குக் காட்டின இரக் கத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளும்; நீர்

தெரிந்துகொண்டவர்கள் அடை யும் நன்மைகளைப் பார்த்து, உமது சனத்திற்கு வருஞ் சந்தோஷத்தைக் கண்டு அகமகிழ்ந்து உமது சுதந்தர மானவர்களைப்பற்றி நீர் துதிக்கப் படும்படி,

சங்கீதங்கள் 34:4

என் உயிரைப் பறிக்கத் தேடுகிறவர்கள் வெட்கி நாணமடைவார் களாக! எனக்குப் பொல்லாப்பு களைச் (செய்ய) நினைக்கிறவர்கள் சிதறுண்டு குன்றிப்போகக்கடவார்கள்.

சங்கீதங்கள் 9:10

உமது திருநாமத்தை அறிந் தவர்கள் உம்மில் நம்பிக்கை வைக்கக் கடவார்கள். ஏனென்றால், ஆண்ட வரே உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை.

பழமொழியாகமம் 18:22

நல்ல மனைவியைத் கண்டு பிடிக்கிறவன் நன்மையைக் கண்டு பிடிக்கிறான்; அது கொடுத்த சந்தோ ஷத்துக்குரிய கொடையாம். நல்ல மனைவியை தள்ளிவிடுகிறவன் நன்மை யைத் தள்ளிவிடுகிறான்; விபசாரியை வைத்திருக்கிறவனோவென்றால் மதிகேடனும் அக்கிரமியுமாயிருக் கிறான்.

சங்கீதங்கள் 119:2

ஆண்டவரே, அநியாயம் பேசு கிற உதடுகளுக்கும் கபடுள்ள நாவுக் கும் என்னைத் தப்புவியும்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 19:10

சிதறிப்போனதைத் தேடி இரட் சிக்கும்படியாகவே மனுமகனும் வந்தி ருக்கிறார் என்றார். (மத். 18:11.)

சங்கீதங்கள் 34:10

என் எலும்புகளெல்லாம் சொல்வதேனெனில்: ஆண்டவரே! உமக்கு ஒத்தவனார்? ஏனெனில்: அவனிலும் பலசாலிகளுடைய கரத் திற்கு ஏழையானவனை தப்புவிப்பீர். ஏழைகளையும் தரித்திரரையும் தங்கள் சொத்துகளை பறிக்க வந்தவர்களி னின்று இரட்சிப்பீர்.

ஆமோஸ் ஆகமம் 5:14

நீங்கள் பாக்கியவான்களாய் வாழும்படி தின்மையையல்ல, நன்மை யைத் தேடுங்கள்; அப்போது சேனை களின் நாயகரான ஆண்டவர் நீங்கள் சாதிப்பதுபோல் உங்களோடிருப்பார்.

ஆமோஸ் ஆகமம் 5:4

இஸ்ராயேல் வீட்டைக் குறித்து ஆண்டவர் இன்னுஞ் சொல்வதே தெனில்: நம்மைத் தேடுங்கள்; நீங்கள் சுகமே வாழ்வீர்கள்.

எபேசியர் 6:10

கடைசியாய், சகோதரரே, கர்த்தரிடத்திலும், அவருடைய சர்வ வல்லப சக்தியிலும் திடங்கொள்ளுங்கள்.

இசாயாஸ் ஆகமம் 55:6

ஆண்டவரைக் காணக்கூடிய போதே அவரைத் தேடுங்கள்; அவர் சமீபித்திருக்கையிலே அவரைப் பிரார்த்தியுங்கள்.

இசாயாஸ் ஆகமம் 65:1

முன் நம்மை யார் என விசாரி யாதவர்கள் நம்மைத் தேடினார்கள்; நம்மைத் தேடாதவர்கள் நம்மைக் கண்டடைந்தனர்; நாம் நமது நாமத் தைக் கொண்டாடாத சனத்தை நோக்கி: இதோ நாம் (இருக்கின் றோம்,) இதோ நாம் காத்திருக்கின் றோம் என்றோம் (உரோ. 10:20).

சங்கீதங்கள் 119:45

பழமொழியாகமம் 24:14

அவ்வாறே உன் ஆன்மாவுக்கு ஞானத்தின் போதகமுமாம்; அதை நீ கண்டுபிடித்தால் (உன்) கடை முடி வில் உனக்கு நம்பிக்கை உண்டாகும், உன் நம்பிக்கையும் அவலமாகாது.